# பத்திரிக்கை செய்தி

## புதிய மின் இணைப்பு வழங்க ரூ.10,000/- லஞ்சம் கோரிய வழக்கில் திரு.கோதண்டராமன், இளநிலை பொறியாளர், (முதல்நிலை) ஜே.ஜே. நகர் மேற்கு, முகப்பேர் மேற்கு கைது

புகார்தாரர் திரு.விவேக் குமார், முகப்பேர் மேற்கு, சென்னை என்பவர் 3வது பிளாக், முகப்பேர் மேற்கில் உள்ள தன்னுடைய தாயரின் வீட்டின் 2வது தளத்தில் உள்ள கட்டிடத்திற்கு புதிதாக சிங்கில் பேஸ் கூடுதல் மின் இணைப்பு வேண்டி 26.10.2022 தேதியன்று ஆன்லைனில் விண்ணப்பித்து விட்டு மறுநாள் 27.10.2022 மின் இணைப்பிற்கு வேண்டிய அனைத்து ஆவணங்களுடன் நொளம்பூர், முகப்பேர் மேற்கு மின் வாரிய அலுவலகம் சென்று மின் இணைப்பு வழங்கும் பொறுப்பு அதிகாரியான இளநிலை பொறியாளர் திரு.கோதண்டராமன் அவர்களை சந்தித்ததில், அவர் ஆவணங்களை சரிபார்த்துவிட்டு ஆன்லைனில் இணைப்புக்கு வேண்டிய அரசாங்க கட்டணத்தை செலுத்திவிடுமாறும், தனக்கு லஞ்சமாக ரூ.10,000/-ம் தந்துவிட வேண்டுமென்று கூறியுள்ளார். அதன்பின்னர் 02.11.2022-ந் தேதி ஆன்லைனில் இணைப்புக்குண்டான கட்டணத்தொகையை செலுத்தியவுடன் மறுநாள் 03.11.2022 தேதியன்று எதிரி திரு.கோதண்டராமன் மற்றும் உடன் ஒருவரும் புகார்தாரரின் வீட்டை இணைப்புக்காக ஆய்வு செய்துவிட்டு சென்றவர்கள் 5 நாட்களாகியும் எந்த மின் இணைப்பும் தராததால் புகார்தாரர் 08.11.2022 தேதியன்று எதிரியை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்ததாகவும் அப்போது அவர் 2 நாட்களுக்குள் அவர் கேட்ட ரூ.10,000/- லஞ்சப்பணத்தை கொடுத்தால் தான் இணைப்பு கிடைக்கும் என்று கராறாக தெரிவித்ததாக தன்னுடைய புகாரில் தெரிவித்ததன் அடிப்படையில், எதிரியை பற்றிய இரகசிய விசாரணை செய்த ஆய்வாளர் இன்று 14.11.2022 தேதி V&AC, Chennai City–II, Cr.No.10/AC/2022/CC-II, u/s 7 of PC (Amendment) Act 2018 ல் வழக்கு பதிவு செய்து எதிரியை பிடிக்க பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொண்டார். பொறிவைப்பு நடவடிக்கையின் போது எதிரி புகார்தாரரை முகப்பேர் ரோட்டில் உள்ள நொளம்பூர் V-7 காவல் நிலைய அவுட் போஸ்ட் அருகில் வரச்சொல்லி லஞ்சப்பணம் கேட்டதாகவும், அப்போது புகார்தாரர் அவரிடமிருந்த ரூ.10,000/-த்தை எடுத்துக்கொடுத்தவுடன் எதிரி அதனை வாங்கி எண்ணிப்பார்த்து வைத்துக்கொண்டார். இதனை மறைந்திருந்து கண்காணித்துக் கொண்டிருந்த பொறிவைப்பு அதிகாரி அரசு சாட்சிகளின் முன்னிலையில் எதிரி லஞ்சப்பணம் வாங்கியிருந்ததை உறுதி செய்த பின்னர் கையும்களவுமாக கைது செய்து எதிரியிடமிருந்து லஞ்ச பணம் மீட்கப்பட்டது. புலன் விசாரணைக்கு தொடர்பாக புகார்தாரர் மின் இணைப்புக்கு வேண்டிய ஆவணங்களின் நகல்கள் எதிரியின் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டு எதிரியின் கைது பற்றி அவருடைய உயர்அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டது. எதிரியை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்டது.